உமறுப்புலவர்
தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

**ஏப்ரல் 2019**


**தொடர்புக்கு:**

2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

62980781

**இணையப் பக்கம்:**
www.uptlc.moe.edu.sg


புதியது ஆண்டு மலர் 2017 பார்க்க;

| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|

| முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். | 1 |
| படித்ததில் பிடித்தது | 1 |
| பழமொழியும் பிழைமொழியும் | 1 |
| அழகுதமிழ் அறிவோம் | 1 |
| மாதிரிக் கட்டுரை | 2 |
| இயற்கை மாசுபாடு பற்றிய மாணவர்களின் கவிதைகள் | 2 |
| அஞ்சுவது அஞ்சாமை பேதமை | 3 |
| 'அம்மா' - கவிதை | 3 |
| சம்பவம் | 3 |
| யோகாவின் சிறப்புகள் | 3 |
| பிழையும் சரியும் | 3 |


## முக்கிய நிகழ்வுகள்

- SA1 Oral Exam ஏப்ரல் 1 To 5
- SA1 Written Exam ஏப்ரல் 22To 27
- Sec1HTL Cultural Camp மே 25
- Sec1 To 4HTL Students CIP Prgramme

## முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

அன்பு மாணவர்களே! வணக்கம். ஏப்ரல் மாதம் தொடங்கிவிட்டது. இந்த மாதத்தில் தேர்வுகள் ஆரம்பித்துவிடும் என்பது நீங்கள் அறிந்த ஒன்றே. இதற்காக நீங்கள் அனைவரும் திடமான குறிக்கோளை மனத்தில் இருத்திக்கொண்டு நேரத்தையும் முறைப்படி வகுத்துக்கொண்டு அதற்கேற்ப பாடங்களையும் பயிற்சிகளையும் செய்து வருகிறீர்கள். உங்களின் இத்தகைய முயற்சிக்கும் பயிற்சிக்கும் எங்களின் பாராட்டுகள்! 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்ற நெறி உங்கள் வாழ்வில் உண்மை ஆகட்டும்! உங்களின் அயராத உழைப்பால் பள்ளிப் பாடங்கள் அனைத்திலும் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கு எங்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## படித்ததில் பிடித்தது

டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் தன் தந்தையைப் பற்றித் தன் நூலில் இவ்வாறு எழுதியிருப்பார். அதாவது, "நான் சிறுவனாக இருக்கும்போது ஒரு நாள் இரவு வெகு நேரத்திற்குப் பின் என் தாய் இரவு சிற்றுண்டி செய்யத் தொடங்கினார். என் தாயும் எங்கள் குடும்பத்தைச் சமாளிக்க வேலைக்குச் செல்வது வழக்கம். அவர் சமைத்த பின் கருகிய ரொட்டி ஒன்றை என் கண்முன் தந்தைக்குப் பரிமாறினார். ஆனால், என் தந்தை அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் சாப்பிட்டார். அப்போது என்னிடம் 'இன்று பள்ளியில் என்ன நடந்தது' என்று கேட்டார். நான் அதற்கு என்ன பதில் சொன்னேன் என்று தெரியவில்லை. என் தாய் அவரிடம் கருகிய ரொட்டியைப் பரிமாறியதற்கு வருத்தம் தெரிவித்தார். என் தந்தையோ "எனக்குக் கருகிய ரொட்டிதான் ரொம்பப் பிடிக்கும்" என்று பதில் சொன்னதை என்னால் இன்றும் மறக்க முடியாது. சாப்பிட்டு முடித்த சற்று நேரத்திற்குப்பின், நான் மெல்ல என் தந்தை அருகில் சென்று வணக்கம் சொல்லிவிட்டு, அவரிடம் தயக்கத்துடன் கேட்டேன்.
"அப்பா! உங்களுக்குக் கருகிய ரொட்டிதான் ரொம்பப் பிடிக்குமா?" என்று. சற்று நேரம் அமைதியாக இருந்த என் தந்தை, என்னை இறுக்கமாக அணைத்துக்கொண்டு சொன்னார். 'மகனே! உங்க அம்மா தினமும் வேலைக்கும் சென்றுகொண்டு, நமக்கும் பணிவிடை செய்கிறார். களைத்துப்போய் இருப்பார். ஒரு கருகிய ரொட்டி யாரையும் காயப்படுத்துவதில்லை. ஆனால் கடும் வார்த்தைகள் கண்டிப்பாகக் காயப்படுத்தும். நான் ஒன்றும் சிறந்த மனிதன் அல்ல. ஆனால், அதற்கு முயற்சி செய்கிறேன். இவ்வளவு வருடங்களில் நான் கற்றுக்கொண்டது, நடப்பது எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு சந்தோஷமான மனநிலைக்கு நாம் மாறுவதே" என்று கூறியதாக எழுதியிருந்தார். டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் இந்த அனுபவத்தைப் படித்தபோது அவருடைய அப்பாமீது நமக்கு அளவில்லாத மரியாதை எழுகிறது. எனவே, நாமும் பிறர் மனம் நோகாதபடி நடந்துகொள்ள வேண்டும்.

## பழமொழியும் பிழைமொழியும்

**பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து!**

நம் தமிழர் பண்பாட்டில் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதும் நம் நாட்டைப் பிடிக்க வரும் பகைவர்களை எதிர்த்துக் களத்திற்குச் சென்று போர் செய்வதும் நம் வாழ்வியல் நெறியாகும். வீரத்திற்குப் பேர்பெற்ற நம் தமிழர்கள் படைக்குப் பிந்து என்று கூறியிருக்க மாட்டார்கள். பந்தி என்று வந்தால் விருந்தினர்களுக்குப் படைப்பதற்கு முந்த வேண்டும் என்றும் படைக்கின்றவர்களும் விருந்தினர்கள் உண்ட பின்பே உண்ணவேண்டும் என்றும் கூறியிருப்பார்கள். இத்தகைய பழக்கமே பின்னாளில் மருவி **பந்திக்கு முந்து படைக்குப் பிந்து** என்று வழங்கியிருக்க வேண்டும் என்பர்.

## நம்பிக்கை



நம்பிக்கை என்பது கடல் போன்ற சிக்கல்களைக் கடப்பதற்கும் மலை போன்ற தடைகளைத் தடுப்பதற்கும் மனத்திற்கு உதவியாக இருப்பது.

## படிக்கும்போது நினைவில் கொள்வது எப்படி?

பனுவலை ஒருமுறைக்கு இருமுறை படிக்க வேண்டும்.

பனுவலின் ஒவ்வொரு சொல்லையும் பொருள் புரிந்து படிக்க வேண்டும்.

பின்னர், பனுவலின் பொருள் சுருக்கத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

## அழகுதமிழ் அறிவோம்!

| | |
|---|---|
| ADAPTER | இணைப்பான் |
| ANIMATION | அசைவூட்டம் |

மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

## முக்கனி

மாம்பழம்
பலாப்பழம்
வாழைப்பழம்



# மாதிரிக் கட்டுரை

## தேர்வும் அச்ச உணர்வும் - என் கருத்து

'அச்சம் என்பது மடைமையடா' என்பது கவிஞர் கண்ணதாசன் எழுதிய வரி. இதை நம்முடைய நடைமுறை வாழ்க்கையிலும் உண்மையென்று எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் நம் வாழ்வில் ஏற்படும் தடைகளுக்காக அஞ்சுவது இயல்பு. ஆனால், அத்தடையை எண்ணி அஞ்சாமல் செயல்படுவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்பர் பெரியோர். நமக்கும் தேர்வு நேரங்களில் தேர்வை எண்ணி அச்சம் வருவது இயல்புதான். அந்தத் தேர்வையும் அதனால் வரும் அச்ச உணர்வையும் கூறுவதுடன் அதைப் போக்குவதற்கான வழியினைப் பற்றியும் என் கருத்தினை இக்கட்டுரையில் பதிவு செய்கிறேன்.

நானும் மற்றவர்களைப்போல் ஒரு சராசரி மாணவன்தான். தேர்வு என்றால் எனக்கும் பயம் இருக்கும். இருந்தாலும் நான் பல நேரங்களில் தேர்வை எண்ணிப் பயம் கொள்வதில்லை. தேர்வில் தேர்ச்சியடையா விட்டால், வீட்டில் பூசை கிடைக்குமே என்று நினைக்கின்றபோது எனக்குப் பயம் ஏற்படும். பயம் மனிதர்களுக்கு இருப்பது நல்லது. பயம்தான் பல தீய செயல்கள் செய்வதிலிருந்து நம்மைத் தடுக்கிறது. அதுபோல்தான் தேர்வைக் கண்டு நாம் பயப்படாமல் இருந்தால் கல்லாமை என்ற தீய செயல் குடிகொள்ளும் மனப்பான்மை நம்மிடம் ஏற்பட்டுவிடும். எனவே, நாம் எந்தெந்த விசயத்துக்குப் பயம்கொள்ள வேண்டுமோ அந்தந்த விசயத்துக்கு நிச்சயம் பயம்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் எந்தெந்த விசயத்துக்குப் பயம்கொள்ளக் கூடாதோ அந்தந்த விசயத்துக்கெல்லாம் ஒருபோதும் பயப்படக்கூடாது. நாம் எப்பொழுதும் பயந்துகொண்டே இருந்தால் வாழ்க்கையில் பல பிரச்சினைகள் ஏற்படும். நம் வாழ்க்கை மகிழ்ச்சியாகவே இருக்காது. நாம் எந்தச் செயலையும் செய்வதற்குத் தயங்கிக்கொண்டே இருந்தால் நம்முடைய வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படாது. நம்மால் மற்றவர்களைப்போல் சின்னச் சின்னச் சாதனைகள்கூடச் செய்ய முடியாது. நம்மிடம் இருக்கும் பயத்தை நீக்குவதற்கு முதலில் நாம் நம்மீது தன்னம்பிக்கை கொள்ளவேண்டும். இந்த நம்பிக்கைதான் ஒருவனை வாழ்வின் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்லும். இதையே நம் முன்னோர் 'யானையின் பலம் அதன் தும்பிக்கையிலே மனிதனின் பலம் அவன் நம்பிக்கையிலே' என்றார்கள். இத்தகைய மனப்பான்மை நம் மனத்திற்கு வலிமையைச் சேர்க்கும். நாம் முன்னேறிச் செல்லும் பாதைகளில் இருக்கும் தடைகளை நீக்கும். இவ்வுலகில் வசிக்கின்ற பெரும்பாலான பணக்காரர்கள் தன் சுய நம்பிக்கையின் மூலம்தான் வளர்ச்சியடைந்து வருகிறார்கள். ஒருசிலர் துணிந்து வியாபாரத்தை ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் பலமுறை தோல்வியுற்றாலும் இறுதியில் மிகப்பெரிய வெற்றியைப் பெறுகிறார்கள். எனவே, இவர்களை எல்லாம் நமக்குச் சிறந்த வழிகாட்டிகளாக நினைக்கவேண்டும். இவர்களின்மூலம் நாம் தேர்வை எண்ணி அஞ்சாத மனப்பான்மைபெற்ற மாணவர்களாக மாறிவிடுவோம். தேர்வில் வெற்றிபெறத் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருந்தால் நிச்சயமாக நாம் உயர்வடைவோம்.

**ரமேஷ் கனியமுதன்**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**

### இயற்கை வளங்களின் மாசுபாடு!

இயற்கையன்னையே நீ!
அருவியாய், மழையாய்
இந்த மண்ணுலகை மலரச் செய்தாய்!
நாங்கள் குப்பைகளையும்
விஞ்சும் கழிவுகளையும்
நித்தம் மிதக்கச்செய்தோம்
அதில் நஞ்சாய்!

பொதிகை மகளே நீ!
தென்றல்காற்றாய்க் குளிர்ந்து
தேகத்தில் தவழ்ந்து
கொஞ்சிச் சென்றாய்!
நாங்கள் சொகுசு
வாகனத்தில் விரைந்து
என்றும் மாசாக்கினோம்
உன்னை அனலாய்!

கருணைத்தாயே நீ!
மண்ணில் பொன்னையும் வளத்தையும்
பசுமையான செடிகொடிகளையும்
செழிக்கச் செய்தாய்!
நாங்கள் நெகிழியால்,
வேதி உரங்களால்
உன் ஆரோக்கியம்
சிதைத்தோம் மடலாய்!

**செந்தில்குமார் ஹரீஸ்வரன்**
**உயர்நிலை 3 தமிழ் இலக்கியம்**
**உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்.**

### இயற்கையைக் காப்போம்!

வடிவான இயற்கையை
அடியோடு அழிக்காமல்
கடிவாளம் போட்டு
மனிதனைத் தடுத்திடுவோம்!
விடிவெள்ளி முளைத்திடும்
அடிவானை என்றும்
முடிவான நல்மனம் கொண்டு காத்திடுவோம்!
காசுக்கு ஆசைப்பட்டு
மாசுக்கள் பெருக்காமல்
ஓசோனில் ஓட்டை தனை நிறுத்திடுவோம்!
தூசுக்கள் புகையுடன் அசுத்தங்கள் நிரப்பாமல்
வீசிடும் தென்றல் தனை ரசித்திடுவோம்!
சுற்றிடும் பூமியிங்குப் பல்லாண்டு நிலைத்திடவே
பற்றின்றி அனைவரும் பங்கு கொள்வொம்!
கற்றிடும் கல்விவழி சுற்றுச்சூழல் மேம்படவே
முற்றிலும் அனைவரும் முடிவு செய்வோம்!

**சஹானா ஃபர்ஸீன்**
**உயர்நிலை 2 உயர்தமிழ்**

### இயற்கையின் எச்சரிக்கை



ஓ மனிதா!
காற்றை மாசுபடுத்தினாய்
கடலைத் தூசுபடுத்தினாய்
காடுகளை அழித்தாய்
கனிமவளங்களைச் சுரண்டினாய்
நிலங்களைக் கூறிட்டு மாளிகையாக்கினாய்
ஓ மனிதா!
மனிதம் இல்லையா உன்னில்!
கடைசி வாய்ப்புத் தருகிறோம் நாங்கள்
திருந்திவிடு!
இல்லையேல் நாங்கள் திருத்திவிடுவோம்
உங்களை!
சுனாமியாய் – மழை வெள்ளமாய் –
சூறாவளியாய் – நிலநடுக்கமாய்!

**முஹம்மது காமில்தீன் சமிஸ் ஜஸ்ரா**
**உயர்நிலை 2 உயர்தமிழ்**
**உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்.**

### இயற்கை வளத்தை நீட்டிப்போம்!

சின்னஞ்சிறு உலகத்தில் இயற்கை தரும்
இன்பம்
அதை அழித்து நம் பூமாதேவிக்குத் தருவது
துன்பம்
இயற்கையில் ஆரோக்கியமாக இருக்க
வேண்டியது சிங்கம் – ஆனால்
நெகிழியால் நிரம்பியிருப்பது பூமியின் அங்கம்
இயற்கை தருவது உயிர்களுக்குச் சுவாச வாயு
அதையழித்து நாம் குறைப்பது நம்முடைய
ஆயுள்
பச்சை நிரம்பியிருந்த பூமியின் மேலே
எரிவாயு நிரம்பியருக்கிறது இன்றைய வேளை

இதைச் சரிசெய்வது நம்முடைய கடமை
அதை மறுத்து விட்டால் அது மடமை
இதைப் புரிந்து நாம் நடப்போம்
இயற்கையின் வளத்தை நிலத்தில் நீட்டிப்போம்.

**அபிஷேக் சிவராஜ்**
**உயர்நிலை 2 உயர்தமிழ்**
**உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்.**

## அஞ்சுவது அஞ்சாமை பேதமை

“அறிவியல் கூடத்திற்கு வரவும். நாளை நாம் பாம்புகளைப் பற்றி ஆய்வு செய்வோம்,” என்று அறிவியல் ஆசிரியர் மாணவர்களிடம் கூறிவிட்டு விடைபெற்றார். அறிவியல் பாடம் இறுதிப் பாடமாக இருந்ததால், மாணவர்கள் அனைவரும் தம்முடைய பள்ளிப் பைகளைத் தூக்கிக்கொண்டு சிறுத்தை வேகத்தில் வீட்டை நோக்கி விரைந்தனர். ராமுவின் மனத்தில் ஆசிரியர் கூறிய 'பாம்பு' என்ற சொல் நிற்காமல் ஓடிக்கொண்டே இருந்தது. அவன் தன் கால்களை முன்வைக்க, அவன் நினைவுகள் பின்நோக்கிச் சென்றன.

சென்ற வருடம், பூமி தினத்தை முன்னிட்டுப் பள்ளிக்கு அருகில் இருந்த பூங்காவைச் சுத்தம் செய்ய ராமுவும் அவன் வகுப்பினரும் சென்றனர்.ராமுவின் ஆசிரியர் மாணவர்களின் எண்ணிக்கையைச் சரிபார்க்க ஒவ்வொரு பெயர்களையும் சொல்லி அழைத்தார். பின்னர், பள்ளிப் பேருந்து அங்கு வந்தது. அனைத்து மாணவர்களும் பேருந்திற்குள் ஏறினர். பேருந்திலிருந்து ஜில்லென்ற குளிர் காற்று அவர்களை வரவேற்றது. மாணவர்கள் ஏறியதும் பேருந்து நகர ஆரம்பித்தது. மாணவர்கள் சிறிது நேரத்தில், பூங்காவிற்கு வந்தனர். அந்தப் பூங்கா மிகப்பெரியதாக இருந்தது. ஆசிரியர், மாணவர்களிடம் அவர்கள் சுத்தம் செய்ய வேண்டிய இடங்களைக் காட்டினார். பின்னர், சுத்தம் செய்யப் பயன்படுத்தும் பொருட்களையும் வழங்கினார். பக்கத்தில், 'இங்குப் பாம்புகள் உள்ளன. ஜாக்கிரதை!' என்று ஓர் அறிவிப்பு, பலகையில் எழுதி இருந்தது. கதிர் என்னும் ஒரு மாணவன் ராமுவைச் சீண்டுவதிலேயே குறியாக இருந்தான். அவன் அந்த அறிவிப்புப் பலகையை ஓர் ஆயுதமாக வைத்துக் கொண்டான். கதிர் தன் சட்டைப்பையில் வைத்திருந்த ஒரு பொம்மைப் பாம்பை ராமுவின் பின்னால் மெதுவாகப் போட்டான். ராமு பின்பக்கம் திரும்பியதும், அவன் அந்தப் பொம்மைப் பாம்பைப் பார்த்துப் பயத்தில் கத்தினான். அவன் கை, கால்கள் நடுங்க ஆரம்பித்தன. கதிர் “ஹா ஹா! பொம்மைப் பாம்புக்கே இவ்வளவு அச்சப்படுகிறாயே!” என்று கூறியதும் அவனுடைய நண்பர்களில் ஒருசிலர் அவனைப் பார்த்துச் சிரித்தனர்.

“நீ வீரன் என்றால், அந்த இடத்திற்குச் செல்!” என்று கூறி மரங்கள் அடர்ந்த ஓர் இடத்தை மதன் ராமுவிடம் காட்டினான். அப்போது ராமுவின் நண்பர்கள், “ராமு , அவன் உன்னைப் பயமுறுத்தப் பார்க்கிறான். ஆத்திரகாரனுக்குப் புத்தி மட்டு. ஆத்திரம் கொள்ளாதே!” என்று எச்சரித்தும், ராமு அதற்குச் செவிசாய்க்காமல் காட்டை நோக்கி வேகமாகச் சென்றான். அப்போது “புஸ் புஸ்” என்ற சத்தம் ராமுவின் காதுகளில் கேட்டது. சற்றுத் திரும்பிப் பார்த்தான். அங்கு ஒரு பாம்பு இருந்தது. முதலில் பயந்த ராமு இது நண்பர்களின் வேலை என்று எண்ணித் தொடர்ந்து நடந்தான். மீண்டும் சத்தம் கேட்டது. அப்போதுதான் அவன் அது பொம்மைப் பாம்பு இல்லை. உண்மையான பாம்பு என்று உணரத் தொடங்கினான். உடனே ராமு பயத்தில் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கத்தினான். அவனுடைய குரலைக் கேட்ட ஆசிரியர் ஓடிவந்து பாம்பை விரட்டினார். பாம்பு வேறு திசையை நோக்கிச் சென்றது. அப்போதுதான் அஞ்சுவது அஞ்சாமை பேதமை என்று உணரத்தொடங்கினான். இக்கதையின்மூலம் நாம் அஞ்சவேண்டிய இடத்தில் அஞ்சவேண்டும் இல்லையெனில் அது பேதமையாகிவிடும் என்று கூறிய திருவள்ளுவரின் வாக்கை அறியலாம்.

**ஶ்ரீநிதி நரசிம்மன்,**
**நதிரா,**
**ஶ்ரீநிதி**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**

## ‘அம்மா!’

அம்மா அம்மா என்று அழைப்பதும் நாமே
அம்மா இல்லையெனில் இங்கேது நாமே
அம்மா என்று அழைக்காத உயிரில்லையே
ஆசைமுத்தம் தராத நல்மனமும் இல்லையே

கொஞ்சும் அம்மாவின் கைகளில் நாமெல்லாம் குழந்தைகளே!
கொடுக்கும் அம்மாவின் கைகளும் வள்ளல்களே!
அம்மாவின் சமையலும் ஆசையைத் தூண்டும் அறுசுவைதான்!
அன்பை நமக்குக் காட்டிடும் உள்ளந்தாம்!

தங்கத்தால் வாங்க முடியாத அம்மா!
தரணியில் உயர்ந்த பொருள் அம்மா!
அம்மா இல்லையே அகிலம்தான் ஏது?
அண்டத்தில் உயிர்களின் படைப்புத்தான் ஏது?

**செந்தில்குமார் சிவா**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**

## சம்பவம்

அன்று மதியம் தென்றல் காற்று இதமாக வீசியது. இராமு படிப்பதோ தொடக்கநிலை ஒன்று. அவன் பள்ளியில் தமிழ்ப்பாட வகுப்பு இல்லை. அதனால் அவன் மற்றொரு பள்ளிக்குச் செல்ல வேண்டும். மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அன்போடு கற்றுக்கொடுப்பார்கள். அதனால்தான் இராமு தமிழ்ப்பாட வகுப்புக்குச் செல்லும்போது மலர்ந்த தாமரை முகம்போல் இருப்பான்.

இராமு பேருந்துக்காக வெகுநேரம் காத்திருந்தான். அவன் தன்னுடைய கைபேசியில் மும்முரமாக எதையோ பார்த்துக்கொண்டிருந்தான். ‘படார்’ என்று சத்தம் கேட்டது. சற்றும் தாமதிக்காமல் அவன் சத்தம் வந்த திசையை நோக்கினான். அவன் அதிர்ச்சி அடைந்தான். உறைந்துபோனான். இராமுவின் நண்பன் பாலாவோ சாலையின் நடுவில் கிடந்தான். தலையில் இருந்து இரத்தம் கசிந்தது. வலியில் துடித்தான். அதைக் கண்ட இராமு மருத்துவவண்டியை அழைத்தான்.

சில நிமிடங்களில் மருத்துவவண்டி வந்து நின்றது. மருத்துவமனைக்குப் பாலாவைத் தூக்கிச் சென்றனர். இராமுவின் மனம் படபடவென்று அடித்தது. மருத்துவர் இராமுவைப் பார்த்துப் பயப்படாதே தம்பி. உன் நண்பன் நன்றாக இருக்கிறான் என்று கூறினார். இராமு பெருமூச்சுவிட்டு அவரிடம் நன்றி கூறினான்.

**முகமட் நதீம் மாலிக்**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**

## பிழையும் - சரியும்

| ☒ | ☑ |
|---|---|
| குடுக்க | கொடுக்க |
| நெத்தி | நெற்றி |
| நாத்து | நாற்று |
| பாத்தான் | பார்த்தான் |
| காத்தாடி | காற்றாடி |
| கொடைபிடி | குடைபிடி |
| மரபுடமை | மரபுடைமை |
| தாப்பாள் | தாழ்ப்பாள் |
| எண்ணைய் | எண்ணெய் |

## தந்தையின் சிறப்பு!

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் அம்மா, அப்பா, சொந்தம் பந்தம் போன்ற உறவுகள் தேவை. இவர்களில் அப்பா என்ற உறவு ஓர் அற்புதமான உறவு. தாய் தன் பிள்ளைகள்மீது கொண்டுள்ள அன்பை ஏதோ ஒருவிதத்தில் வெளிப்படுத்திக்கொண்டே இருப்பாள். ஆனால் தந்தை தன் பிள்ளைகள்மீது கொண்டுள்ள அன்பைத் தன்னுள் மறைத்துக்கொண்டு இருப்பார். தந்தையின் மார்பைவிட வேறு ஒரு பாதுகாப்பான இடம் இவ்வுலகத்தில் உள்ளதா? ஆயிரந்தான் பெண் குழந்தைகளுக்கு அம்மாவின் அன்பு முக்கியம் என்றாலும் அப்பாவின் அரவணைப்பும் அவசியம். பொதுவாக அப்பாக்கள் பெண் குழந்தைகளின் மேல் அதிகப் பாசம் வைத்திருப்பார்கள். ஆதலால், பெண் பிள்ளைகளை அவரகள் சீராட்டிப் பாராட்டி வளர்ப்பதுண்டு. ஒரு பெண்ணின் தந்தை அவள் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள அனைத்து நுணுக்கங்களையும் சீருடனும் சிறப்புடனும் அமைக்கப் பெரும் பாடுபடுகிறார். அவள் வழ்க்கையில் ஒரு தப்பும் தவறும் ஏற்பட்டுவிடாமல் அல்லும் பகலும் பாதுகாக்கும் பாதுகாவலரே தந்தை. பத்து மாதம் சுமந்து பெற்ற தாயைவிட வாழ்க்கை முழுவதும் சுமக்கும் தந்தையே மேலனாவர்.

**சுபஶ்ரீ வைத்தியநாதன்**
**உயர்நிலை 2 உயர்தமிழ்**

பயணம் தொடர்வோம்...